1987 ஏப்ரல் 24]

பார்த்து, சேலம் ஸ்டீல் பிளாண்டுக்குப் பக்கத்தில் நிலத்தை இதற்காக ஒதுக்கித் தரலாம் என்றும், அங்கே கட்டலாம் என்றும் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நிலத்தைக் கையகப்படுத்த சேலம் மாவட்ட ரெயில்வே செஸ் பண்டிலிருந்து 56,81,000 ரூபாய் தருவதற்கு இசைந்திருக்கிறார்கள். அதை வைத்து நிலம் கையகப்படுத்திய பிறகு, கட்டிடம் கட்டும் வேலை தொடங்கப்படும்.

திரு. சு. சிவராஜ் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கையில் சேலத்திலே புதிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதைத் தவிர தமிழகத்திலே புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க உத்தேசமுள்ளதா? தனியார் யாராவது தொடங்க முன் வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் அன்றி, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையில் ஒன்று போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் துவக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. தனியார்கள் 3 கல்லூரிகளைத் துவக்க ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. மற்றும் சிலர் மனு போட்டிருக்கிறார்கள். அவற்றை இப்போது அரசு பரிசீலிப்பதாக இல்லை.

மேட்டூர் நீர்த்தேக்கம் அருகிலுள்ள தொழிற்சாலை கழிவுநீர்.

479—(*வினா எண். 3169)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் நீர்த்தேக்கம் அருகில் உள்ள பகுதிகளில் தொழிற்சாலை கழிவுநீரின் ரசாயன கலவை கலந்துவிடுவதால் அங்கு தோண்டப்படும் ஆழ்துளை கிணறுகளிலிருந்து வரும் தண்ணீர் பயன்படுத்த முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தப் பகுதிகளில் குடிநீருக்கு அரசு செய்த மாற்று ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வீரக்கல் புதூர் பேரூராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின்கீழ் விநியோகக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[1987 ஏப்ரல் 24

திரு. ரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் இந்தத் திட்டம் தீட்டப் பட்டுள்ளது? மேலும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறையின் மூலமாக தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது இப்படி நிலங்கள் எல்லாம் பாதிப்பு ஏற்படுமே என்ற விவரங்களை அவர் கள் எடுத்துச் சொல்வது கிடையாதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீருக்காக எவ்வளவு ரூபாய் செலவாகி இருக்கின்றது என்ற புள்ளிவிவரம் இப்போது என்னிடம் இல்லை. குடிநீர் வடிகால் வாரியத் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வி போட்டால் பதில் தருவார். ஏற்கனவே தொடங்கப்பட்ட ஆலை களுக்கு சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்தியதன் வாயிலாக, அவைகளை அமைத்து இருக்கின் றார்கள். மாசு கட்டுப்பாடு துறையின் அறிவுரைகளை ஏற்று அதன்படி தரத்திற்கேற்றவாறு தண்ணீரை வெளியேற்றுகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, இந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஆற்றிலேயோ நிலத்திலேயோ கலந்து போவதால் அந்த ஆற்றிலுள்ள தண்ணீரும், நிலப்பகுதியும் கெட்டுப் போகின்ற காரணத்தினால் அந்தக் கழிவு நீரை ஆவியாக்கி மேலே போகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் வெளியேற்று கிற தண்ணீரை பரிசோதனை செய்து தரத்திற்கு அதிகமாக இருக்குமானால் அந்தத் தண்ணீர் பயன்படுத்த வாய்க்கு இல்லை என்ற காரணத்தினாலே மறுக்கிறார்கள். அந்த தரத்திற்குக் கீழ் பட்டிருக்கின்றது என்றால் அந்தத் தண்ணீரை காவிரி ஆற்றிலே விட அனுமதிக்கிறார்கள். இப்போது சேலத்திலே இருக்கின்ற ஆலைகளுக்கு சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்கப்பட்ட காரணத் தினால் அதிலே வாய்ப்பு இல்லை என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கின்றது.

குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப் பிரிவு.

480—(* வினா எண். 2965) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப் பிரிவு (Med cal Gastro Entrology) தமிழகத்தில் சென்னை பொது மருத்துவமனையில் மட்டும்தான் இருக்கிறது என்பது உண்மையா ?